தினமலர்
உண்மையின் உரைகல்

**மானிய விலை சோலார் மோட்டார்; விவசாயிகள் அதிக ஆர்வம்**

**பொன்னேரி :**

அரசு மானிய விலையில் பெறப்பட்ட சோலார் மற்றும் ஆழ்துளை மோட்டார் பயனுள்ளதாக இருக்கிறது' என, விவசாயி மகிழ்ச்சியுடன் கூறி உள்ளார்.

பொன்னேரி, வேளாண்மை பொறியல் துறை சார்பில், மானிய விலையில், பஞ்செட்டி, சின்னகாவணம், தேவராஞ்சேரி, லட்சுமிபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 19 விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் மின்மோட்டார்கள் வழங்கப்பட்டு உள்ளன. ஒவ்வொன்றும், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார்கள் இயங்கும் வகையில், 17 பேனல்களுடன் சோலார்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும், 300 முதல், 340 வோல்ட் மின்சாரத்தை கொண்டு, மூன்று ஏக்கர் விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடிகிறது.

இதுகுறித்து, பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் பகுதியைச் சேர்ந்த விவசாயி தாரகராமன் கூறியதாவது:நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சோலார் சிஸ்டத்தை, மானிய விலையில், 93 ஆயிரம் ரூபாய்க்கு அரசு வழங்கியது. அதில் சோலார் சிஸ்டம், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார், 160 அடி பிளாஸ்டிக் உருளை ஆகியவை இருக்கும்.தினமும், காலை, 7:00 மணி முதல், மாலை, 5:00 மணி வரை, மோட்டார் இயங்குகிறது. தானியங்கி சுவிட்ச் உள்ளதால், சூரிய வெளிச்சம் குறையும் நேரங்களில் தானதாக அணைந்து விடும். மீண்டும் வெளிச்சம் கிடைத்தவுடன், இயங்க துவங்கும்.மேலும், மின்சாரத்தை நம்பி இருக்காமல், சோலார் மூலம் ஆழ்துளை மோட்டார் இயங்குவதால், விளை நிலங்களுக்கு சிரமமின்றி தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த சோலார் சிஸ்டம் அமைந்து உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கருவேப்பிலை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

**சின்னசேலம்:**

சின்னசேலம் பகுதிகளில் கருவேப்பிலை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் பாண்டியங்குப்பம், தகரை, கல்லாநத்தம் உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளது. கரும்பு, மரவள்ளி, மக்காசோளம், கருவேப்பிலை பயிரிடுகின்றனர். குறைந்த செலவு அதிக லாபம் உள்ளிட்ட காரணங்களால் கருவேப்பிலை பயிரிடுவதில் அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனர். கருவேப்பிலை ஒரு முறை நடவு செய்தால் 10 ஆண்டுகள் வரை அறுவடை செய்யலாம். மரமாக வளர 2 முதல் 5 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்தாக பயிரிடுவதற்கு 1 முதல் 2 மீட்டர் இடை வெளியில் நடவு செய்ய வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை

தண்ணீர் விட்டால் போதுமானது. நடவு செய்த 7 மாதத்தில் இருந்து அறுவடை செய்ய முடியும். மாதத்திற்கு 2 முறை அறுவடை செய்யலாம். அறுவடை செய்யும் போது 10 செ.மீ., அளவு விட்டு அறுவடை செய்ய வேண்டும். ஒரு கிலோ 30 முதல் 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விழா காலங்களில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. பராமரிப்பு செலவு குறைவு, அதிக லாபம், கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் கருவேப்பிலை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**பருவமழை ஏமாற்றியதால் வறட்சி நிவாரணம் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை**

சேலம்: "தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால், வறட்சி பகுதியாக அறிவித்து, நிவாரணத்துக்கான நடவடிக்கைகளை, மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்' என, சேலத்தில், நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

சேலம் கலெக்டர் அலுவலகத்தில், மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நடந்தது. விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு, மனுக்களை வழங்கியும், கோரிக்கையை முன்வைத்தும் பேசினர்.

மழை காலம் துவங்குவதால், ஏரிகளையும், குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும். அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். விவசாய தொழிலை மறந்து, 100 நாள் வேலையளிப்பு திட்ட பணிக்கு சென்று விட்ட, தொழிலாளர்களை மீண்டும், விவசாய தொழிலில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரவள்ளி கிழங்குக்கு உரிய விலை நிர்ணயிக்க வேண்டும். அதற்கென சிறப்பு குழு அமைத்து செயல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள வறட்சி நிவாரணத்தை விரைந்து கிடைக்க செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லை. வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளதால், மழைக்கான வாய்ப்பு குறைவாக உள்ளது. எனவே, வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும். சிலுவம்பாளையம் பகுதியில், கரும்பு சக்கைகளை ரோட்டில் போட்டு வைத்துள்ளனர். எளிதில் தீப்பிடிக்கும் ஆபத்து உள்ளது. அவற்றை அகற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

**பாசிப்பயிறு விளைச்சல் அதிகரிப்பு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**
**பள்ளிபாளையம்:**

"கடந்தாண்டை காட்டிலும், இந்தாண்டு பாசிப்பயிறு விளைச்சல் அதிகம் உள்ளதால், ஏக்கருக்கு, 40 ஆயிரம் ரூபாய் நிகர லாபம் கிடைக்கும்' என, விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

பள்ளிபாளையம் வட்டாரத்தில், கிழக்கு தொட்டிப்பாளையம், ஆலாம்பாளையம், காலனி மற்றும் பல்வேறு பகுதிகளில், பாசி பயிறு சாகுபடியை, விவசாயிகள்

மேற்கொண்டுள்ளனர். மூன்று மாத பயிரான பாசிப்பயிறு, அறுவடை துவங்கி உள்ளது. கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டு அமோக விளைச்சல் கிடைத்துள்ளதுடன், கூடுதல் விலை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அறுவடை செய்யும் பயிர்களை மொத்தமாக வாங்கிச் செல்வதற்கு வியாபாரிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.
இது குறித்து விவசாயி ராஜமாணிக்கம் கூறியதாவது:
“பாசிப்பயிறு விளைச்சல் அதிகரித்துள்ளதால், ஒரு ஏக்கருக்கு, 750 முதல், 800 கிலோ வரை கிடைத்துள்ளது. கடந்தாண்டு, 600 முதல், 650 கிலோ வரை மட்டுமே கிடைத்தது. ஒரு கிலோ பாசிப்பயிறு, 60, 65 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. தற்போது, கிலோவுக்கு, 90 முதல், 100 ரூபாய் வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டை காட்டிலும், விளைச்சல் அதிகம் உள்ளதால், ஒரு ஏக்கருக்கு செலவு போக, நிகர லாபம், 40 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.” இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்**

**கோத்தகிரி:**

"தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கவேண்டும்' என, தேயிலை ஏஜன்ட்கள் நலச்சங்கம் வலியுறுத்தியுள்ளது. கோத்தகிரியில் நீலகிரி பசுந்தேயிலை ஏஜன்ட்கள் நலச்சங்க செயற்குழு கூட்டம் நடந்தது. செயற்குழு உறுப்பினர் சங்கர் வரவேற்றார். கூட்டத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: மழை தொடரும் நிலையில், தேயிலை தோட்டங்களில் உரமிட்டு, இடைநடவு செய்வதற்கு நிலத்தில் உகந்த ஈரத்தன்மை உள்ளதால், தேயிலை வாரியம், உரம் உள்ளிட்ட இடுப்பொருட்களை மானிய விலையில் வழங்கவேண்டும்; பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துவரும் நிலையில், கட்டுப்படியான விலை கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. சங்க தலைவர் சிலாக்கியம் துரை தலைமை வகித்தார். உறுப்பினர்கள் சிவாஜி மற்றும் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயற்குழு உறுப்பினர்கள் தேவன், பீட்டர் மற்றும் குமார் உட்பட பலர் பங்கேற்றனர். செயற்குழு உறுப்பினர் லிங்கன் நன்றி கூறினார்.

**சத்தி கூட்டுறவு ஏலத்தில் பருத்தி விலை குறைவு**

**சத்தியமங்கலம்:**

சத்தியமங்கலத்தில் நடந்த, ஏல விற்பனையில், பருத்தி விலை குறைந்ததால், விவசாயிகள் விரக்தியடைந்தனர்.
சத்தியமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் விளைந்த பருத்தியை, விவசாயிகள், சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு, ஏல முறையில் விற்பனை செய்ய கொண்டு வந்திருந்தனர்.
இந்த பருத்தியை வாங்க, கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதியில் இருந்து விவசாயிகள் வந்தனர். சங்கத்தில் நடந்த ஏலத்தில், பருத்தி குவிண்டால், 4,200 முதல்,

4,800 ரூபாய் வரை விற்பனையானது. இந்த விலை, விவசாயிகளின் உற்பத்தி செலவுக்கே, பற்றாக்குறையாக இருக்கும், என, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**வீரிய ஒட்டு நெல் விதைப்பண்ணை உதவி இயக்குனர் நேரில் ஆய்வு**
**சத்தியமங்கலம்:**
சத்தியமங்கலம் பகுதியில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள, வீரிய ஒட்டுநெல் விதைப்பண்ணையை, ஈரோடு விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன் ஆய்வு செய்தார்.
சத்தியமங்கலம் பகுதியை சேர்ந்த வரதம்பாளையம், பெரியகுளம் ஆகிய கிராமங்களில், வேளாண் பல்கலை கழகம் சார்பில் வீரிய ஒட்டுநெல் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த விதைப்பண்ணையில், கோ.ஆர்.எச்., 3, கோ.ஆர்.எச்., 4 ஆகிய ரகங்களுக்கு உற்பத்திக்கு தேவையான விதைகள், விவசாயிகளுக்கு வழங்கபட்டு, விதைப்பண்ணை அமைக்கப்பட்டு உள்ளது. சி.எம்.எஸ்., 23 ஏ, என்ற பெண் வரிசையும், சி.பி., 174 ஆர் என்ற, ஆண் வரிசை ரகத்தையும், ஒட்டு சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள, இந்த புதிய வீரிய ஒட்டுரக விதைப்பண்ணையை, ஈரோடு விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன் ஆய்வு செய்தார்.
மரபுத்தூய்மையற்ற கலவன் செடிகளை அகற்றுதல், பூக்கும் பருவத்தில் பெண் வரிசையில் காணப்படும் மகரந்த கொடிகளை அகற்றுதல், ஆண், பெண் ரகம், ஒரே நேரத்தில் பூக்க செய்ய வேண்டிய வழிமுறைகளை, விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், இந்த பெண் வரிசையில் கிடைக்கும், வீரிய ஒட்டுநெல் கோ.ஆர்.எச்., 4- ரகத்தை, தாளடி, சம்பா பருவத்தில் பயிரிடலாம் என்றும், 135 நாட்கள் கொண்ட இந்த ரகம், வெள்ளை பொன்னியை ஒத்து, சமைக்கும் பண்பு கொண்டதாகும், என்றார். ஆய்வின்போது, வேளாண்மை பல்கலைகழக நெல்துறை உதவி பேராசிரியர் மனோன்மணி, விதை சான்று அதிகாரி சண்முகசுந்தரம், சசிகலா ஆகியோர் உடன் இருந்தனர்.
**விவசாயிகளுக்கு மக்காசோள விதைகள்**
**நாகர்கோவில்** ; குமரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவானூ அதிகாரி உதயகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குனர் இளங்கோ மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். குமரி மாவட்டத்தில் இதுவரை மக்காசோள விதைகள் வழங்கப்படவில்லை. முதன் முறையாக 15 கிலோ எடை கொண்ட பாக்கெட் விதைகளை கலெக்டர் வழங்கினார்.

கூட்டத்தில் விவசாயிகளுக்கான நிவாரணம், சானல், ரோடு சீரமைத்தல் தொடர்பான பல கேள்விகளை விவசாய சங்க உறுப்பினர்கள் எழுப்பினர்.

உத்தமபாளையம் அருகே, ரூ.3 கோடி மதிப்பீட்டில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க முதல்கட்ட பணிகள் தொடக்கம்



**உத்தமபாளையம் அருகே ரூ.3 கோடி மதிப்பீட்டில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான முதல்கட்ட பணிகள் தொடங்கி உள்ளன.**

<u>திராட்சைஆராய்ச்சிநிலையம்</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழைக்கு அடுத்தபடியாக கறுப்பு திராட்சை விவசாயம் அதிக அளவில் நடக்கிறது. இந்த பகுதியில் நிலவும் மிதமான தட்பவெப்பம், விவசாயத்திற்கு ஏற்ற மண் வளத்தை பெற்றுள்ளது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான அளவில் கறுப்பு திராட்சை விவசாயம் செய்யப் படுகிறது. ஆண்டு முழுவதும் திராட்சை கிடைக்கும் இடமாககம்பம்பள்ளத்தாக்குபகுதிதிகழ்கிறது.

காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத் தேவன் பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, கோகிலாபுரம் உள்ளிட்ட ஊர்களில் திராட்சை விவசாயத்தை நம்பி ஆயிரக் கணக்கான தோட்ட தொழிலாளர்கள் உள்ளனர். கடந்த சில வருடங்களாக கறுப்பு திராட்சைக்கு போதிய விலை கிடைக்காமலும், திராட்சை கொடியில் செவட் டை நோய் தாக்கியதாலும் விவசாயிகள் பாதிக்கப்பட் டனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்கி, ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சையை சாகு படி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதிவிவசாயிகள்கோரிக்கைவிடுத்தனர்.

**ரூ.3கோடிஒதுக்கீடு**

விவசாயிகளின் கோரிக் கையை ஏற்றுக்கொண்டு தரம் வாய்ந்த திராட்சை சாகுபடி செய்யவும், ஆராய்ச்சி நிலையம் அமைக்கவும் அரசு உத்தரவிட்டது. இதை அடுத்து கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளை மராட்டிய மாநிலம் புனேவிற்கு அழைத்து சென்று திராட்சை விவசாயம் குறித்து பயிற்சி அளித்தனர். ஆராய்ச்சி நிலையம் அமைப் பதற்காக ராயப்பன்பட்டி- சண்முகாநதி அணை சாலையில் உள்ள ஆனைமலை யன்பட்டியில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான 28 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது.

திராட்சை ஆராய்ச்சி நிலை யம் அமைக்க ரூ.2 கோடியே 90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டது. கட்டிட பணிகள் நடந்து வரும் நிலையில் தற் காலிகமாக ராயப்பன் பட்டி யில் உள்ள தனியார் கட்டிடத் தில் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. 3 தோட்டக்கலைத்துறை விஞ்ஞானிகள், இரண்டு அலுவலர் களுடன் இந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தற்போது ஆராய்ச்சி நிலையம் அமைய உள்ள இடத்தில் சுமார் 6 ஏக்கரில் பல்வேறு ரக திராட்சை கொடிகள் நடப் பட்டு ஆராய்ச்சி தொடங்க உள்ளது. முதல் கட்ட பணிகள் 90 சதவீதம் முடிவடைந் துள்ளது.

**விவசாயிகள்மகிழ்ச்சி**

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, திராட்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்க நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது முதல் கட்ட பணிகள் நடந்து வருகின்றன. கம்பம் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப் பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக் கிறது.

கறுப்பு திராட்சை விவ சாயத்தில் போதுமான லாபம் இல்லாததால் விவசாயத்திற்கு செலவு செய்த பணத்தை கூட எடுக்க முடியாமல் தவித்து வந்தோம். ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டதால் விவசாயிகளுக்கு உறுதுணை யாக இருக்கும். ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சை சாகுபடி செய்யவும், திராட்சை விவசாயத்தில் உள்ள பல்வேறு தொழில்நுட்பம் குறித்தும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது' என்றனர்.

தினசரி பால் கொள்முதல் 11 ஆயிரம் லிட்டர் உயர்ந்துள்ளது பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவர் தகவல்



விருதுநகர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் தினசரி பால் கொள் முதல் 11 ஆயிரம் லிட்டர் உயர்ந்துள்ளது என அதன் தலைவர் கண்ணன் தெரிவித்துள்ளார்.

**கூட்டம்**

விருதுநகர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு வரும் பாலின் அளவு மற்றும் தரத்தை உயர்த்துவதற்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நடந்தது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய தலைவர் கண்ணன் தலைமை தாங்கி பேசினார். அவர் பேசும்போது கூறிய தாவது, இந்த ஒன்றியம் கடந்த காலத்தில் தினசரி 14 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்திருந்தது. அதன்பின்பு முதல்-அமைச்சர் ஜெய லலிதாவின் இரண்டாம் வெண்மைபுரட்சி திட்டப் படி ஏழை விவசாயிகளுக்கு 1,511 விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டதால் அதன் மூலம் தினமும் 3,680 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மானிய விலையில் கால்நடை தீவனம், பசுந் தீவனம் மற்றும் தாது உப்பு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 5,192 உறுப்பினர்களுக்கு சொந்த மான 10,055 கறவை மாடுகள் மூலம் தற்போது தினசரி 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யும் அளவுக்கு முதல்-அமைச் சரின் முயற்சியால் 11 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் உயர்ந்துள்ளது.

**கொள்முதல்**

இந்த ஒன்றியத்தில் கொழுப்பு சத்து 4.2 சத வீதம் மற்றும் இதரச்சத்து 8.3 சதவீதம் என்ற தர அளவில் பால் கொள்முதல் செய்யப்பட்டு, பால் உற்பத்தி யாளர்களுக்கு

வாரத்திற்கு ரூ.54 லட்சம் வரை கொள் முதல் தொகை யாக வழங்கப் பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் ஒன்றிய துணைத்தலைவர்கண்ணன், பொது மேலாளர் சேகர், துணை மேலாளர் (பால் உற்பத்தி) வீரராகவன் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்

வேலூர்,

தமிழகத்தில் விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் கலெக்டர் நந்தகோபால் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர், கூட்டுறவு இணை பதிவாளர் வெங்கடேசன், கால்நடை உதவி இயக்குனர் மனோகரன், மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் அமீர்பாஷா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராமகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:-

கடுமையான வறட்சி

விவசாயி:- தற்போது வேலூரில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கூட்டுறவு கடனை ஒரு வருடம் தாமதமாக திருப்பி செலுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

அதிகாரி:- மறுபரிசீலனை செய்யப்படும்.

விவசாயி:- கோட்டாறு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

கலெக்டர்:- கோட்டாறு கிராமத்தின் அருகில் ஏற்கனவே ஒரு கால்நடை மருத்துவமனை உள்ளது. எனவே அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியம் இல்லை.

விவசாய கடன் தள்ளுபடி

விவசாயி:- மாவட்டத்தில் தென்னை மரங்கள் அதிகளவு பட்டுவிட்டன. எனவே தென்னை வறட்சி நிதி வழங்க வேண்டும். மேலும் கடந்த 14 ஆண்டுகளாக வறட்சி நிலவி வருகிறது. ஆனால் கடந்த ஒரு ஆண்டு மட்டுமே வேலூர் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. எனவே மாவட்டத்தில் விரைந்து வறட்சி நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி:- வறட்சி நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

விவசாயி:- ஆந்திர மாநிலத்தில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசு விவசாய கடன்களை தள்ளுபடி செய்துள்ளது. அதுபோன்று தமிழக அரசும் விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

அதிகாரி:- இதுகுறித்து அரசுக்கு பரிசீலனை அனுப்பப்படும்.

விவசாயி: மாவட்டத்தில் பண்ணை குட்டை அமைக்கும் பணியை 100 நாள் வேலை திட்டத்தில் விடப்பட்டுள்ளதால் பணிகள் தாமதமாக நடக்கிறது. எனவே பண்ணை குட்டை பணியை விவசாயிகளிடமே ஒப்படைத்தால் விரைவில் முடிக்கப்படும்.

அதிகாரி:- இந்த பணி 100 நாள் திட்டத்தில் தான் கொடுக்கப்படும். அவர்கள் பணியை விரைந்துமுடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி:- கூட்டுறவு விற்பனை நிலையத்தில் உரம் அதிகளவில் வைத்துக்கொண்டே, இல்லை என்று கூறுகின்றனர். சரியான முறையில் உரம் வழங்க வேண்டும்.

கலெக்டர்:- நடவடிக்கை எடுக்கப்படும்.

உழவர்சந்தை

விவசாயி:- ஊசூரை அடுத்த கொள்ளைமேடு பகுதியில் ஆடு, மாடுகளுக்கு குடிப்பதற்குகூட தண்ணீர் இல்லை. எனவே இந்த பகுதியில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

கலெக்டர்:- ஆழ்துளை கிணறு அமைக்கப்படும்.

விவசாயி:- உழவர் சந்தைகளில் வியாபாரிகளுக்கு மட்டுமே கடை அனுமதிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு கடை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி:- விவசாயிகளுக்கு கடை ஒதுக்கப்படும்.

விவசாயி:- வேளாண்மை துறையில் பணிகள் தாமதாக நடக்கிறது. விரைந்து நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி:- வேளாண்மை துறையில் 27 வேளாண்மை உதவி அலுவலர்கள் காலி பணியிடங்கள் உள்ளது. விரைவில் காலியிடங்களை நிரப்பிய பின் பணிகள் முடிக்கப்படும்.

வனவிலங்கு சரணாலயம்

விவசாயி:- வாணியம்பாடி தாலுகா, வெளதாகிபெடிமெண்டா பகுதியில் கருங்குரங்கு இனம் அழியும் நிலையில் உள்ளது. எனவே கருங்குரங்குகளை பாதுகாக்க வனவிலங்கு சரணாலயம் அமைக்க வேண்டும்.

கலெக்டர்:- உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி:- மேல்அரசம்பட்டு கோவில்மலை நதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் பாலாற்றில் இருந்து கலவைக்கு செல்லும் கால்வாயை விவசாயிகள் சிலர் ஆக்கிரமித்துள்ளனர். ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி:- நதி மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பணைகள்

விவசாயி:- ஆந்திர மாநிலத்தில் இருந்து பாலாறு வரும் பகுதியில் தடுப்பணைகள் அதிகளவில் கட்டப்படுகிறது. முதல் -அமைச்சர் மூலம் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போட்டு தடுப்பணைகள் அமைப்பதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பாலாறு பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அதிகளவில் உள்ளது. அதிகாரிகள் ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

கலெக்டர்:- ஆக்கிரமிப்புகள் செய்து இருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி:- பாலாறு மற்றும் ஏரிப்பகுதிகளில் விஷத்தன்மை வாய்ந்த முட்புதர்கள்

வளருகின்றன. இதன்மூலம் நீராதாரம் போய்விடுகிறது. இதனை உடனடியாக அகற்றவும், வளராமலும் தடுக்க வேண்டும்.
அதிகாரி:- முட்புதர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு விவாதம் நடந்தது.
குற்றாலத்தில் சாரல் மழை அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு
குற்றாலத்தில் நேற்று சாரல் மழை பெய்தது. இதனால் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.
சாரல் மழை
நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் கடந்த வாரம் சீசன் தொடங்கியது. மெயின் அருவி, ஐந்தருவி ஆகிய அருவிகளில் மட்டும் தண்ணீர் கடந்த சில நாட்களாக சுமாராக விழுந்தது. சாரல் மழை பெய்யவில்லை. வெயில் அடித்தது. ஆனால் காற்றின் வேகம் மிகவும் அதிகமாக இருந்தது.
தண்ணீர் அதிகரிப்பு
இந்தநிலையில் நேற்று காலையில் இருந்தே குற்றாலத்தில் சாரல் மழை விட்டுவிட்டு பெய்து வருகிறது. மலைப்பகுதிகளிலும் சாரல் மழை பெய்தது. இதை தொடர்ந்து மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலியருவி, சிற்றருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் கொட்டியது. மேலும் குளிக்க அனுமதி இல்லாத செண்பகாதேவி அருவி, தேனருவி ஆகிய அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்தது.
நீடிக்குமா?
சுற்றுலா பயணிகள் கூட்டமும் சற்று அதிகளவில் காணப்பட்டது. இந்த நிலை நீடித்தால் ஒரிரு நாட்களில் சீசன் களைகட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தர்மபுரி மாவட்டத்தில் அரூர் பகுதியில் சோளம் விளைச்சல் அமோகம்**

தர்மபுரி, சோலைகொட்டாய் பகுதியில் வெள்ளை நிற சோளமும், அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, தீர்த்தமலை உள்ளிட்ட பகுதியில் சிவப்பு சோளம் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் சோளம், கம்பு, ராகி ஆகியவை உணவில் அதிக அளவில் சேர்க்கப்படுகிறது. பொதுமக்களிடையே உணவில் சிறு தானியங்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதால் ராகி, சோளம், கம்பு உள்ளிட்ட தானியங்களின் தேவை அதிகரித்துள்ளது. இதன்படி அரூர் பகுதியில் அதிக அளவில் சோளம்

பயிரிடப்பட்டுள்ளது. உணவிற்காகவும், மாட்டு தீவனத்திற்காகவும் அதிக அளவில் சோளம் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு மாத பயிரான சோளம் தற்போது விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. அவ்வப்போது பெய்த கோடை மழையால் விளைச்சல் நன்றாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**காலிபிளவர் கிலோ ரூ.55க்கு விற்பனை**

கோவை, : வரத்து குறைந்துள்ளதால் காலிபிளவர் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.26க்கு விற்கப்பட்ட 1 கிலோ காலிபிளவர் நேற்றைய நிலவரப்படி ரூ.29 அதிகரித்து ரூ.55க்கு விற்கப்பட்டது. கோவை உக்கடம் டி.கே.மார்க்கெட்டுக்கு பெங்களூர், ஒசூர், மற்றும் ஆலாந்துறை, செம்மேடு, இருட்டுபள்ளம், நரசீபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து காலிபிளவர் வருகி றது. கடந்த மார்ச் மாதத்தில் காலிபிளவர்வரத்து அதிகமாக இருந்ததால் 1 கிலோ ரூ.10க்கு விற்கப்பட்டது. இந்நிலையில், கடந்த மாதத்தில் வெயில் தாக்கத்தால் விளைச்சல் குறைந்து மார்க்கெட்டுக்கு வரத்தும் குறைந்தது. இதன் எதிரொலியாக கிலோவுக்கு ரூ.16 அதிகரித்து கடந்த மா தம் 1 கிலோ காலிபிளவர் ரூ.26க்கு விற்றது. தற்போது காலிபிளவர் வரத்து தொடர்ந்து குறைந்துள்ளதால் இதனால், விலை ரூ.29 மேலும் அதிகரித்து நேற்றைய நிலவரப்படி 1 கிலோ ரூ.55க்கு விற்கப்பட்டது. நடுத்தர ரகம் ரூ.48க்கு விற்றது. இதுகுறித்து காலிபிளவர் வியாபாரி ஒருவர் கூறியதாவது, ‘ காலிபிளவரை பொறுத்த வரை நல்ல முறையில் விளைச்சல் எடுப்பதற்கு 4 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால், பாசன வசதி, மழை இல்லாததால் பூக்கள் வாடி, புழுக்கள் தாக்கி காலிபிளவர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வரத்து குறைந்து தற்போது 10 டன் அளவு காலிபிளவர் மட்டு மே மார்க்கெட்டுக்கு வருகின்றன. இதன் எதிரொலியாக விலையும் அதிகரித்து வருகிறது ‘ என்றார்.

**207 டன் காய்கறி விற்பனை**

கோவை, : கோவை மாவட்டத்தில் பண்ணை பசுமை கடைகளில் 207 டன் காய்கறி விற்பனை நடந்துள்ளதாக அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார். கோவை மண்டலத்தில் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் பொது வினியோக திட்டம் தொடர்பான ஆய்வு கூட்டம் நேற்று நடந்தது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடந்த இந்த கூட்டத்தில், தமிழக கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜூ, கோவை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராமமூர்த்தி, துணை பதிவாளர் இந்துமதி, மாவட்ட வழங்கல் அலுவலர் சிதம்பரம், நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவு வங்கி, உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கலந்து கொண்டனர். இதில் ஆதிதிராவிடர்,

பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட கடன் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. 2011-2013ம் ஆண்டில் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி மூலமாக 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 32 குடோன்கள், 500 மெட்ரிக் டன் கொண்ட ஒரு குடோனும் கட்டப்பட்டது. விவசாயிகள் விளை பொருட்களை சேமிக்க, 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 35 குடோன்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. 4.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. நடப்பாண்டில், 1.03 கோடி ரூபாய் செலவில் பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குடோன் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த குடோன் கட்டி முடிக்கப்பட்டால் விவசாயிகள் கொப்பரைகளை எளிதாக சேமிக்க முடியும். கடந்த பிப்ரவரி 24ம் தேதியில் நகரில் 10 பண்ணை பசுமை கடைகள் துவக்கப்பட்டது. இதுவரை 41.71 லட்ச ரூபாய்க்கு, 207 டன் காய்கறிகள் விற்கப்பட்டது. மலிவு விலை அரிசி திட்டத்தில், கடந்த ஆண்டு ஏப்ரல் 17ம் தேதியிலிருந்து இதுவரை 9 மையங்கள் மூலமாக 558 டன் புழுங்கல் அரிசி, 17 டன் பச்சரிசி  விற்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்தார். சாயிபாபா காலனியில் உள்ள ரேஷன் கடை மற்றும் பண்ணை பசுமை கடைகளில் விற்பனை தொடர்பாக அமைச்சர் ஆய்வு நடத்தினார். பண்ணை பசுமை கடை, கூட்டுறவு மருந்தகங்களில் விற்பனையை அதிகரிக்க உத்தரவிட்டார்.

**தோட்டக்கலை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி**

தொட்டியம், : நத்தம் பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலை சார்பில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தொட்டியம் தாலுகா நத்தம் ஊராட்சியில் பல்வேறு பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஊராட்சித் தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார்.  மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் சந்திரசேகர் பல்வேறு திட்டங்கள், மானியங்கள் குறித்து பேசினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் வரவேற்றார். திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி பேராசிரியர் ஜீவஜோதி, மா, கொய்யா, வாழை பயிர்களுக்கு தேவையான தொழில்நுட்ப கருத்துக்களையும், ஜெகதீசன் வெங்காய பயிர்களின் தொழில்நுட்ப கருத்துக்களையும் விளக்கினர். மாலைநத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மா அமர்வு தோட்டத்தினை விவசாயிகள் பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் முத்துக்குமரன், யோகேந்திரன் செய்திருந்தனர். தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடி சிறப்பு திட்டம் விரைவில் செயல்படுத்த முடிவு**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கான சிறப்பு திட் டம் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழகத்தில் டெல்டா பகுதிகளில் நிலத்தடிநீர் ஆதாரமுள்ள குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் ஆகியவற்றின் மூலம் சுமார் 1லட்சம் ஏக் கர் பரப்பில் குறுவை சாகு படியை ஊக்குவிக்கும் நோக்கில் ரூ.32.95 கோடி யில் குறுவை சாகுபடிக் கான சிறப்பு திட்டம் அறிவிக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்திற்காக ரூ.1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் நீர் ஆதாரமுள்ள குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் பாசனமுள்ள வட்டாரங்களான அந்தநல் லூர், முசிறி, மண்ணச்ச நல்லூர் மற்றும் லால்குடி பகுதியில் 8,000 ஏக்கரில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து திருச்சி வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் கூறுகை யில், இத்திட்டத்தின்கீழ் திருந்திய நெல்சாகுபடி முறையில் சமுதாய நாற்றாங்கால் அமைக்க ஒரு ஏக் கர் நா ற்றாங்கால் அமைப்பதற்கான செலவினம் மற் றும் இடுபொருட்களுக் கான ரூ.25ஆயிரம் மான் யம் வழங்கப்பட உள் ளது. இச்சமுதாய நாற்றாங்கால் 70ஏக்கர் பரப்பில் அமைக்க இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் 7,000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்வதற்கான தரமான நெல் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு முழு மான்யத்தில் வழங்கப்பட உள்ளது. குறுவை நெற்பயிரின் உற்பத்தி திறனை அதிகரிக்க, 100 சதவீத மான்யத்தில் ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்சத்து உரம் மற் றும் 10 கிலோ சிங்சல்பேட் உரம், 5,000 ஏக்கருக்குரிய பயனாளிகளுக்கு ஜிப்சம் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வீதம் 2,500 ஏக்கருக்கு உயிர் உரங்கள் மற்றும் திரவ வடிவிலான உயிர் உரங்கள் தலா 4,000 ஏக்கருக்கும் வேளாண்மை துறையின் மூலம் வழங்கப்பட உள்ளது என்றார்.

100சதவீத மான்யத்தில் இயந்திரங்கள்

மேலும் குருராஜ்சிங் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் உள்ள 20 விவசாய குழுக்களுக்கு 100 சதவீத மான்யத்தில் நெல் நடவு இயந்திரமும், நெற்பயிரில் களையெடுக்கும் இயந்திரமும் மற்றும் பாசன நீர் விரையமாவதை தவிர்க்க ஒரு பயனாளிகளுக்கு அதிகபட்சமாக 180மீட்டர் நீளமுள்ள 150யூனிட் 90எம்எம் ஹெச்டிபிஇ பைப்பும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வழங்கப்பட உள்ளது.  இதன் மூலம் டெல்டா வட்டாரங் களில் குழாய் கிணறு மூலம் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவித்து குறுவை சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

**நக்கம்பாடி ஊராட்சியில் இலவச கால்நடை மருத்துவ முகாம்**

அரியலூர்: நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியம் நக்கம்பாடி ஊராட்சியில் இலவச கால்நடை மருத்துவம் மற்றும் மலடுநீக்க சிகிச்சை முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் திருமால் முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் நக்கம்பாடியை சேர்ந்த 97 பேர் தங்களுடைய 486 பசு, 155 செம்மறி ஆடுகள், 362 வெள்ளாடுகள், 191 கோழிகள் என 1194 கால்நடைகளை கொண்டு வந்து சிகிச்சையளித்தனர்.

345 வெள்ளாடுகள் மற்றும் 140 செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கம், 456 பசுக்களுக்கு அடைப்பான் நோய் தடுப்பூசி, 350 வெள்ளாடுகள் மற்றும் 50 செம்மறியாடுகளுக்கு துள்ளுமாரிநோய் தடுப்பூசி மற்றும் 191 கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டது. முடிவில் கன்றுகள் பேரணி நடத்தப்பட்டு, கலந்து கொண்ட 19 கிடேரி கன்றுகளில் 10 சிறந்த கன்றுகளுக்கு ஊராட்சி தலைவர் திருமால் பரிசு வழங்கினார். செந்துறை கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் குமார், கால்நடை பராமரிப்பு உதவியாளர் லட்சுமணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வறட்சியால் கரும்பு சாகுபடி பாதிப்பு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க விவசாயிகள் கோரிக்கை கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்**

அரியலூர்: அரிய லூர் மாவட்டம் சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிருக்கு ஏக்கருக்கு ரூ.40,000 நிவா ரணம் வழங்கிடக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் அரியலூர் தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது.கரும்பு விவசாய சங்க மாவட்ட செயலாளரும், மாநில குழு உறுப்பினருமான மணியன் தலைமை வகித்து பேசினார். கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாய சங்க மாநில செய லாளர் காமராஜ் பேசுகை யில், வறட்சியின் காரண மாக கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 நிவாரணம் வழங்க வேண்டும். 3நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர்களை கணக்கெடுத்து ஒரு வாரத்திற்குள் வறட்சி நிவா ரண பட்டியலை வெளியிடவேண்டும். அதன் பின் நிவாரணம் வழங்க வேண் டும் என்றார். அகில இந்திய விவசாய சங்க மாவட்ட துணைத்தலைவர் பிச்சைபிள்ளை பேசுகையில், மாவட்ட தலைநகரமான அரியலூரில் பாதாள சாக்கடை பணியால் சாலைகள் மிக மோசமாக உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவமனை, அரியலூர் அரசு மருத்துவமனை எவ்வித அடிப்படை வசதியுமின்றி ஆரம்ப சுகாதார நிலையம் போல் உள்ளது. ஒராண்டில் மாவட்டத்தில் 4 கலெக்டர்கள் மாறி விட்டனர். அமைச்சர்களை மாற்றுவது போல தமிழக அரசு, அரியலூர் மாவட்ட கலெக்டர்களை மாற்றுகிறது. குறைந்த பட்சம் பணிக்கு வரும் கலெக்டரை ஒராண்டு இருக்குமாறு

செய்ய வேண்டும் என்றார். விவசாய சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை, கரும்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் ஜெயபால், விவசாய சங்க வட்ட செயலாளர் வரபிரசாதம், கரும்பு விவசாய சங்க மாநில குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். கரும்பு விவசாயிகள் சங்க துணை தலைவர்கள் புண்ணியமூர்த்தி, நல்லதம்பி, யோகநாதன், தட்சணாமூர்த்தி, ஆரோக்கியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கோரிக்கைகளை வலியுறுத்தி பேசிய நிர்வாகிகள், பின்னர் கலெக்டரை சந்தித்து மனு கொடுப்பதற்காக, அரியலூர் பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் சென்றனர். ஆனால் நுழைவாயில் முன் பகுதியில் அவர்களை தடுத்து நிறுத்திய போலீ சார் அனைவரையும் அனுமதிக்க முடியாது என்றும், குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே செல்ல அனுமதிக்க முடியும் என தடுத்து நிறுத்தி விட்டனர். பின்னர் சங்க நிர்வாகிகள், கலெக்டர் அலுவலகத்திற்குள் சென்று, அலுவலக மேலாளர்(குற்றவியல்) அன்பழகனிடம் மனுக்களை கொடுத்தனர். தாசில்தார் முருகன், இன்ஸ்பெக்டர் ராஜேஸ் வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**நீடாமங்கலம் அருகே திருந்தியநெல், குறுவை சாகுபடி நடவுப் பணிவேளாண் உற்பத்தி அதிகாரி ஆய்வு**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் அருகே திருந்திய நெல் சாகுபடி நடவு மற்றும் இயந்திரம் மூலம் குறுவை சாகுபடி நடவுப்பணியை வேண் உற்பத்தி ஆணையர் சந்தீப்சக்ஷேனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழக முதல்வரின் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் 2014ன்படி சமுதாய நாற்றங்கால், மற்றும் 100 சதவீதம் மானிய உரம், பைப் வழங்கப்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டமான திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத்தில் 45 ஆயிரம் ஏக்கர் நெல் கோடை சாகுபடி செய்யப்பட்டு இயந்திரம் மூலம் அறுவடை முடியும் நிலையில் உள்ளது. அதேபோல் நீடாமங்கலம் பகுதியில் குறுவை நடவு  பம்பு செட் மூலம் தொடங்கியுள்ள நிலையில் நீடாமங்கலம் அருகே நகர் கிராமத்தில் சக்கரவர்த்தி, மோ கன்தாஸ்காந்தி ஆகியோர் 19 ஏக்கர் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி நடவு பெண் தொழிலாளர்களை கொண்டும், குறுவை சாகுபடி நடவுப்பணியை இயந்திரம் மூலம் நேற்று தொடங்கினர். இந்த இயந்திர நடவு மற்றும் திருந்திய நெல் சாகுபடி நடவுகளை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர் வேளாண்மைதுறை சந்தீப்சக்ஷேனா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது விவசாயிகளிடம் நடவு சாகுபடி மற்றும் உற்பத்தி தொடர்பான விளக்கங்களை கேட்டறிந்தார். வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், திருவாரூர் கலெக்டர் மதிவாணன், தலைமை  பொறியாளர் செந்தில், தாசில்தார் மதியழகன்,

வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

**விவசாயிகளின் பொருட்களை சந்தைப்படுத்துவதில் இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லை தூத்துக்குடி கலெக்டர் தகவல்**

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் குழுக்கள் மூலம் சந்தைப்படுத்தப்படுவதால், இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக கலெக்டர் ரவிகுமார் கூறினார். தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் ரவிகுமார் தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள், மனுக்களுக்கு அதிகாரிகள் பதில் அளித்தனர். இதில், கலெக்டர் பேசியதாவது: விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் குழுக்கள் மூலம் சந்தைப்படுத்தப்படுகிறது. இதனால் இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடை பண்ணை வைத்திருப்பவர்களிடம் இருந்து அரசு நேரடியாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்கிறது. ஆவின் பால் குறைவாக கொள்முதல் செய்யப்படுவதாக குற்றம் சாட்டுவது தவறு. தனியார் நிறுவனங்கள் அதிக விலைக்கு பால் கொள்முதல் செய்ததாக அரசை ஏமாற்றி வருகிறது. ஆனால், அரசாங்கம் கொள்முதல் செய்யும் லாபத்தின் பங்கினை விவசாயிகளுக்கே வழங்கி வருகிறது. ஆடு, மாடு, கோழி வளர்ப்பவர்களுக்கு கொட்டகை கட்டுவதற்கும், பால் கறவை இயந்திரங்களை வாங்குவதற் கும் மானியத்துடன் அரசு கடன் வழங்கி வருகிறது. விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் சலுகைகளைப் பற்றி விவசாய பிரதிநிதிகள் அறிந்து கொண்டு விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். கால்நடை வளர்ப்பு, தீவனம், பால் கொள்முதல் குறித்த அலுவலர்கள் கூட்டம் வரும் 23ம் தேதி நடைபெறுகிறது. அதில் விவசாயிகளின் பிரச்னை கள் விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்படும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, வேளாண் துறை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, வன அதிகாரி செண்பகமூர்த்தி, பயிற்சி சப்-கலெக்டர் முருகேசன், கூட்டுறவு துறை இணை பதிவாளர் ஜானகிராமன், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை இடுபொருள் விற்பனை மையம் திறப்பு**

விளாத்திகுளம், : விளாத்திகுளம் எட்டயபுரம் சாலை பிள்ளையார்கோயில் தெருவில் உள்ள ஸ்காட் திட்ட அலுவலக வளாகத்தில் சமுதாய வேளாண்மை இடுபொருள் விற்பனை மையம் திறக்கப்பட்டது. ஸ்காட் நிறுவன தலைவர் கிளிட்டஸ் பாபு, பொதுமேலாளர் தம்பித்துரை வழிகாட்டுதலின்படி நெல்லை ஸ்காட் செயலாக்க இயக்குநர் நாகராஜன் தலைமை வகித்து மையத்தை தொடங்கி வைத்தார். தூத்துக்குடி

ஸ்காட் வேளாண் அறிவியல் மைய திட்ட இயக்குநர் அழகுகண்ணன் முன்னிலை வகித்தார். விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தர்ராஜ் வரவேற்றார். இந்த மையத்தில் விவசாயத்திற்கான இயற்கை உரம், விதைகள் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. இதில் விளாத்திகுளத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்து விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிகுழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னா¢ விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் தொடாபாக கருத்தரங்கு நடத்தப்பட்டது. ஸ்காட் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் முருகன் நன்றி கூறினார்.

**மாம்பழ மகசூலை அதிகரிக்க ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செயல் விளக்கம்**

கிருஷ்ணகிரி, : சிந்தகம்பள்ளி கிராமத்தில் மாம்பழ மகசூலை அதிகரிக்க ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து செயல்விளக்க பயிற்சி முகாம் நடந்தது. பர்கூர் அடுத்த சிந்தகம்பள்ளி கிராமத்தில் உள்ள எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தில், மா மகசூலை அதிகரிக்க ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செயல்விளக்கதிடலை நடத்தியது. இதில் மா சாகுபடி செய்யும் சிறந்த விவசாயிகளை தேர்வு செய்து இந்த செயல்விளக்க திடலை நடத்தியது. இந்த செயல் விளக்கத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களான மா நுண்ணூட்டச் சத்து பயன்பாடு குறித்தும், பழ ஈயினால் ஏற்படும் பாதிப்பினை குறைக்கு பழ ஈ மேலாண்மை தொழில்நுட்பங்களும், அறுவடைக்கு பிறகு பின்பற்ற வேண்டிய கவாத்து முறையினை குறித்த தொழில்நுட்பங்களும் செய்து காண்பிக்கப்பட்டது. இதில் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் பேசுகையில், மா சாகுபடியில் பழ ஈயினால் ஏற்படும் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதனை கட்டுப்படுத்த பழ ஈ இனக்கவர்ச்சிப் பொறியினை பயன்படுத்துவதன் மூலம் ஈயின் தாக்குதலை கட்டுப்படுத்தி, அதிக லாபம் பெறமுடியும் என்றார். மா நுண்ணூட்டச்சத்து குறித்து வேளாண்மை அறிவியல் மையத்தின் மண்ணியல் தொழில்நுட்ப வல்லுநர் குணசேகர் விளக்கினார். அத்துடன் பின்பற்ற வேண்டிய கவாத்து குறித்த தொழில்நுட்பங்களை தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ரமேஷ்பாபு எடுத்துரைத்தார். இந்த செயல்விளக்க திடல் மூலம் பயன்பெற்ற விவசாயியும், முன்னாள் வேளாண்மை இயக்குநருமான குப்புசாமி பேசுகையில், இத்திட்டத்தில் வழங்கப்பட்ட தொழில்நுட்பங்கள் அனைத்தும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதனால் அதிக மகசூல் பெற முடிந்தது. மேலும் பழ ஈயினை கட்டுப்பத்தும் இனக்கவர்ச்சி பொறியினை பயன்பத்தியதன் மூலம் பழ ஈயினால் தாக்குதல் குறைந்து, பாதிப்பு இல்லாத தரமான மா அறுவடை செய்ய முடிந்தது என்றார். விழாவில் சிந்தகம்பள்ளி

கிராமத்தைச் சேர்ந்த சுமார் 30க்கும் மேற்பட்ட மா சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்

தேனி,

விவசாய பயிர்களில் நிர்ணயித்த மகசூல் பெறுவதற்கு சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை செய்வது அவசியம் என்று தேனி விவசாயத் துறை மண் பரிசோதனை நிலைய உதவி வேளாண்மை இயக்குநர் முத்துலட்சுமி கூறினார்.

இது குறித்து அவர் கூறியது: விவசாய நிலங்களில் பயிர் சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கு ஏற்ப உரமிடுவதன் மூலம் நிர்ணயித்த மகசூலை பெறுவதுடன் மண் வளத்தையும் பாதுகாக்கலாம்.

ரசாயன உரங்களை தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்கவும், சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் மண் பரிசோதனை அவசியம்.

பயிர் அறுவடைக்குப் பின்பும், அடுத்த பயிர் சாகுபடிக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில் மண் மாதிரியை எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

நிலத்தின் பல்வேறு இடங்களிலும் தனித் தனியாக மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். வரப்பு, வாய்க்கால், எருக்குழி, மர நிழல் உள்ள பகுதியில் மண் மாதிரியை சேகரிக்கக் கூடாது.

மண் பரிசோதனைக்கு மாதிரி சேகரிக்கும் முறை, மண் பரிசோதனை விவரம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள தேனியில் 1362 சடையால்நகர் 2-வது தெரு, பங்களாமேடு தென்புறம், மதுரை சாலை என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மண் பரிசோதனை நிலையத்தில் நேரிலும், அலுவலக தொலைபேசி எண்:04546-252103 மூலம் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என்றார் முத்துலட்சுமி.

சிவகங்கை அருகே திறந்தவெளி சிறையில் கடலை பயிர் அறுவடை

சிவகங்கை,

திறந்தவெளி சிறைச்சாலையில் நன்னடத்தை கைதிகள் மூலம் முதன் முறையாக பயிரிடப்பட்ட நிலக்கடலை பயிர் அறுவடை செய்யப்பட்டது.

தமிழகத்தில் சேலம், கோவை மற்றும் சிவகங்கை ஆகிய 3 மாவட்டங்களில் திறந்தவெளி சிறைச்சாலைகள் உள்ளன.

இதில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம், புரசடை உடைப்பில் நன்னடத்தை கைதிகளுக்காக 84 ஏக்கர் பரப்பளவில் உள்ள திறந்தவெளி சிறைச்சாலை தான் மாநிலத்திலேயே அளவில் பெரியது. இந்த சிறைச்சாலையை கடந்த சில மாதங்களுக்கு முன் காணொலி காட்சி மூலம் முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.
பிற சிறைகளில் தண்டனை காலத்தைப் பெருமளவு கழித்துவிட்டு நன்னடத்தையுடன் நடந்து கொண்ட கைதிகளில் 34 பேர் தேர்வு செய்யப்பட்டு இந்த திறந்தவெளி சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.
சிறையில் இருப்பதைப் போன்ற உணர்வு இவர்களுக்கு வராமல் இருக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள இந்த திறந்தவெளி சிறைச்சாலையில் பணிகள் வழங்குவதற்காக 3 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ள சிறைத்துறை நிர்வாகம் முடிவெடுத்தது. இதன்படி சென்னை, பாபா ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி டேனியல் செல்லப்பா தலைமையிலான குழுவினர் சிறைச்சாலையில் உள்ள நிலத்தினை கள ஆய்வு மேற்கொண்டனர்.
இதனைத் தொடர்ந்து மும்பை பாபா ஆராய்ச்சி நிலையம், ராஜஸ்தான் போன்ற வறட்சி மாநிலங்களில் நோய் தாக்குதலுக்குள்படாமலும், குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு விளைவிக்கப்படும் டிஜி37ஏ நிலக்கடலை பயிரிட பரிந்துரை செய்தனர்.
இதனைத் தொடர்ந்து சாகுபடிக்காக பாபா ஆராய்ச்சி மையம் சார்பில் சுமார் 175 கிலோ அளவுக்கு விதையை வழங்கினர். கடந்த பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி கடலை நடவினை நன்னடத்தை கைதிகள் மேற்கொண்டனர். 120 நாள் பயிரான இந்த கடலை ரகம் எதிர்பார்த்த நாளுக்கு முன்பாகவே அறுவடைக்குத் தயாரானது. கடந்த புதன்கிழமை (ஜூன் 18ஆம் தேதி) மதுரை சிறைத் துறை கண்காணிப்பாளர் அறிவுடை நம்பி, விஞ்ஞானி டேனியல் செல்லப்பா ஆகியோர் முன்னிலையில் அறுவடைத் திருவிழா நடைபெற்றது. இதில் எதிர்பார்த்த அளவைவிட இரட்டிப்பு மகசூல் கிடைத்தது.
இதுகுறித்து சிறைத்துறை கண்காணிப்பாளர் கூறியதாவது: இந்த திறந்தவெளி சிறைச்சாலையில் உள்ள நன்னடத்தை கைதிகள் தண்டனைக் காலம் முடிந்து வெளியே செல்லும் போது சக மனிதர்களோடு வாழ்வதற்கு ஏற்ற வகையில் விவசாயத் தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறது இது கை கொடுக்கும்.
தற்போது இந்த திறந்தவெளி சிறைச்சாலையில் சுமார் 3.5 ஏக்கர் அளவுக்கு மட்டுமே விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ந விரைவில் இன்னும் அதிக பரப்பில் விவசாயம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். சிறைவாசிகள் கைவினைப் பொருள்கள், உணவுப் பண்டங்களை தயாரித்து

சிறைகளுக்கு வெளியில் உள்ள நிலையங்கள் மூலம் விற்று வருகின்றோம். உணவுப் பண்டங்கள் தயாரிப்பதற்கு இந்த கடலையைப் பயன்படுத்த உள்ளதாகத் தெரிவித்தார்.
சென்னை, பாபா ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி டேனியல் செல்லப்பா கூறுகையில், சிவகங்கை, மதுரை, பாளையங்கோட்டை ஆகிய சிறைச்சாலைகளில் டிஜி37ஏ ரக நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முதல் அறுவடை சிவகங்கை திறந்தவெளி சிறைச்சாலையில் செய்யப்பட்டுள்ளது. நோய் தாக்குதல் இல்லாத, வறட்சியைத் தாங்கி வளரக்கூடியதும், இரட்டிப்பு மகசூல் கிடைக்கக் கூடிய இந்த ரகம் தற்போது ஒரு ஏக்கருக்கு 2300 கிலோ மகசூலைத் தந்துள்ளது.
பிற விவசாயிகளுக்கும் இந்த ரகம் பரிந்துரைக்கப்படும் என்றார்.

## நவீன கரும்பு உற்பத்தி திட்டப் பயிற்சி முகாம்

உடுமலை

உடுமலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன கரும்பு உற்பத்தி திட்டம் குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.
ஆலை வளாகத்தில் நடைபெற்ற இந்த முகாமிற்கு மேலாண்மை இயக்குநர் ஆர்.ஆன ந்தி தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நீர் நுட்பவியல் மைய உதவி பேராசிரியர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார்.
கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக போதிய மழையில்லாத காரணத்தால், ஆலை அர வைக்கு போதுமான அளவு கரும்பு கிடைக்கவில்லை எனவும், நீர் ஆதாரத்தை கொண்டு வாய்ப்புள்ள இடங்களில் கரும்பு நடவினை நீடிக்க நவீன கரும்பு சாகுபடி முறையில் சொட்டு நீர் பாசனம் அமைத்து, பருசீவல் நாற்று உற்பத்தி செய்து, அகல அடி பார் முறையில் நடவு செய்ய வேண்டும் என பயிற்சி முகாமில் விளக்கிக் கூறப்பட்டது. களப் பணியாளர்கள் இத் தொழில் நுட்பத்தை அனைத்து விவசாயிகளிடமும் விளக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.
இதைத் தொடர்ந்து, பவானி சாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் நடராஜன் உழவியல் துறை தொழில் நுட்பங்கள் குறித்தும், பயிர் வினையியல் தொழில்நுட்பங்கள் குறித்து உதவி பேராசிரியர் சிவக்குமாரும் கரும்பை தாக்கக் கூடிய பூச்சி, நோய்கள் குறித்தும், அவற்றை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து உதவிப் பேராசிரியர் மருதாசலமும் பேசினர்.

## பயிர்ச் சேதம் ஏற்படுத்தும் விலங்குகளை சுட்டுக்கொல்ல அனுமதி கேட்டு போராட்டம்

சத்தியமங்கலம்,

பயிர்ச் சேதம் ஏற்படுத்தும் வன விலங்குகளை சுட்டுக்கொல்ல அனுமதி வழங்கக் கோரி போராட்டம் நடத்தப்படும் என, தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி சத்தியமங்கலத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து, மேலும் அவர் கூறியது:

சத்தி, கோபி வட்ட விவசாயிகள், பவானி ஆற்று நீரை பம்ப் செட் மூலமாக எடுத்து குழாய் வழியாக தோட்டங்களுக்கு கொண்டு சென்று ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்கின்றனர். நீர்ப்பாசனப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு உபயோகிக்கும் நீரைவிட பம்ப் செட் பாசனத்தில் மிகக்குறைவாக தண்ணீர் எடுத்து அதிகமான உற்பத்தி செய்கின்றனர்.

பம்ப் செட் மூலமாக தண்ணீர் எடுப்பதால் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படாது. கேரளம், கர்நாடக மாநிலங்களில் ஆற்றில் இருந்து பம்ப் செட் மூலமாக தண்ணீர் எடுத்து விவசாயம் செய்ய அரசு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்துள்ளதைப் போல தமிழகத்திலும் வழங்க வேண்டும்.

சத்தி, கோபி வட்ட விவசாய நிலங்களில் வன விலங்குகள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துவது அதிகரித்து வருகிறது. பயிர்ச்சேதம் ஏற்படுத்தும் விலங்குகளை சுட்டுக்கொல்ல விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். இதுபோன்ற பிரச்னைகளை தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல போராட்டம் நடத்தப்படும்.

இதற்காக, சத்தி, கோபி, அந்தியூர் வட்ட விவசாயிகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் சத்தியில் வரும் 27-ஆம் தேதி மீனாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது என்றார்.

## கடம்பூர் மலைக் கிராமங்களில் பலா சாகுபடி பாதிப்பு

சத்தியமங்கலம்,

சத்தியமங்கலம் அருகே உள்ள கடம்பூர் மலைப் பகுதியில் வறட்சி காரணமாக பலா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

பலா மரங்கள் வளர்வதற்கேற்ற சீரான தட்ப வெப்பநிலை தாளவாடி, கடம்பூர் வனத்தில் மட்டுமே நிலவுவதால் இங்குள்ள விவசாயிகள் தங்களது தோட்டத்தில் இம் மரங்களை வளர்த்து வருகின்றனர். பலா மரங்கள் வளர்க்க செலவு எதுவும் இல்லாததால் ஆண்டுதோறும் பலா விற்பனையால் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கிறது.

அத்தியூர், பவளக்குட்டை, மூலக்கடம்பூர், சாலட்டி, நடூர் மற்றும் மல்லியம் துர்க்கம் மலைக் கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலா மரங்கள் உள்ளன.
இயற்கையான முறையில் பலா மரங்கள் வளர்வதால் இதற்கு சுவை அதிகம்.
சில ஆண்டுகளுக்கு முன் நல்ல மழை பெய்ததால் ஒரு மரத்தில் சுமார் 300 பழங்கள் வரை காய்த்தன. இப்போது வறட்சியால் குளம், குட்டைகள் மற்றும் பள்ளங்கள் வறண்டு காணப்படுவதால் பலா மரங்களுக்கு போதிய நீர் கிடைக்காமல் விளைச்சல் பாதித்துள்ளது. தற்போது, பெரும்பாலான மரங்களில் குறைந்தபட்சமாக 20 பழங்களும், அதிகபட்சமாக 60 பழங்களுமே விளைகின்றன. பலா ஒன்றுக்கு ரூ.75 முதல் ரூ.200 வரை விலை கிடைக்கிறது. பலாப் பழங்களை வியாபாரிகள் தோட்டங்களுக்கே நேரடியாக வந்து கொள்முதல் செய்கின்றனர்.

## சோலையாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்வு

வால்பாறை

கனமழை காரணமாக சோலையாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்துள்ளது.
வால்பாறை பகுதியில் தென்மேற்கு பருவமழை கடந்த 2-ஆம் தேதி முதல் பெய்து வருகிறது. இதனால் வறண்டு காணப்பட்ட ஆறுகளில் வெள்ளம் பெருகி ஓடத் துவங்கியது. இதனால் சோலையாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க துவங்கியது.
இந்நிலையில், கடந்த சில தினங்களாக வால்பாறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.
இதன் காரணமாக கடந்த புதன்கிழமை சோலையாறு அணைக்கு 508.80 கன அடி நீர் வந்தது. வியாழக்கிழமை 1,438 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது.
160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் தற்போது 43 அடியாக உயர்ந்துள்ளது. மழை தொடர்ந்து நீடித்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்வதையடுத்து, மின் உற்பத்திக்காக தண்ணீரை வெளியேற்றும் வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கோத்தகிரியில் பசுந் தேயிலை முகவர்கள் நலச் சங்க கூட்டம்

கோத்தகிரி,

கோத்தகிரியில் நீலகிரி மாவட்ட பசுந்தேயிலை ஏஜண்டுகள் நல ச் சங்கக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
சங்கத் தலைவர் சிலாக்கியம் துரை தலைமை வகித்தார். நிர்வாகிகள் சிவாஜி மற்றும் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கர் வரவேற்றார். இக் கூட்டத்தில், கோத்தகிரி பகுதியில் போதிய மழை பெய்யாததால் தேவையான பசுந் தேயிலை

கிடைப்பதில்லை. எனவே, தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டங்களைக் கவாத்து செய்து தரமான தேயிலை வழங்க முன் வரவேண்டும். மேலும், நீலகிரி மாவட்ட பசுந்தேயிலை ஏஜன்டுகள் சங்கத்தில் இணையாதவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட நிர்வாகிகளைத் தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

தேயிலைத் தோட்டங்களுக்கு இடப்படும் உரம் மற்றும் நாற்றுகள் அதிக விலையேற்றமடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உரம் மற்றும் தேயிலை நாற்றுகளுக்கு அரசு மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மத்திய-மாநில அரசுகள் தேயிலைக்கு நிரந்தர விலையை நிர்ணயிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை அரசுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. சங்க நிர்வாகிகள் தேவன், குமார், பீமன், பி.ஜே.நடராஜ் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். லிங்கன் நன்றி கூறினார்.

## கரும்பு கொள்முதல் விலை நிர்ணயம்: கோட்டாட்சியர் தலைமையில் முத்தரப்புக் கூட்டம்

திருச்செங்கோடு

கரும்பு கொள்முதல் விலை நிர்ணயம் குறித்து திருச்செங்கோட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் முடிவு எட்டப்படாததால், மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்வதாக கோட்டாட்சியர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

திருச்செங்கோடு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், பொன்னி சர்க்கரை ஆலை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்ற முத்தரப்புக் கூட்டம் கோட்டாட்சியர் செங்கோட்டையன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கரும்பு விவசாயிகள் சார்பில், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லாக்கவுண்டர், பொன்னி சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் தங்கவேல், அகில இந்திய விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆதிநாராயணன், பயனீட்டாளர்கள் சங்கத் தலைவர் நடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பொன்னி சர்க்கரை ஆலை சார்பில், அதன் தலைவர் சந்திரமௌலி, துணைத் தலைவர் சாந்தன், பொது மேலாளர் லோகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் அரசு ஆணைப்படி சர்க்கரை ஆலை டன்னுக்கு ரூ 2,650 வழங்க வேண்டும். இல்லையெனில், கரும்பு விவசாயிகளிடம் போட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு

கரும்பை அரவைக்கு அனுப்புகிறோம் என்றனர். மேலும், அரசு ஆணையை மதிக்காமல் இருப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பினர்.
இதற்கு பதிலளித்து ஆலை நிர்வாகிகள் கூறியது:
உற்பத்திச் செலவுக்கு கீழ் சர்க்கரை விலை உள்ளது. இதனால், ஆலை நஷ்டத்தில் இயங்குவதால் அரசு அறிவித்த ஆதரவு விலையைத் தர இயலவில்லை. இதனால், டன்னுக்கு ரூ 2,393 அளித்து வருகிறோம். இந்தத் தொகை நிலைவையின்றி தரப்பட்டுள்ளது. தமிழகத்தில் பல ஆலைகளில் நிலுவைத் தொகை உள்ளது. தமிழகத்தில் உள்ள ஆலைகள் அரசிடம் மானியம் கேட்டுள்ளோம். அது கிடைத்தும் கரும்பு விவசாயிகளுக்கு அரசு அறிவித்த ஆதரவு விலை தரப்படும் என்றனர்.
தொடர்ந்து, விவசாயிகளுக்கும், ஆலை நிர்வாகிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்படவில்லை. இதையடுத்து, இரு தரப்பு கருத்தையும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி அவர் மூலம் அரசின் தீர்வுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்று கோட்டாட்சியர் செங்கோட்டையன் தெரிவித்தார்.
தீர்வு ஏதும் எட்டப்படாததால் வருகிற 26-ஆம் தேதி தமிழகத்தில் உள்ள 16 தனியார் கரும்பு ஆலைகள் முன்பும் காத்திருப்பு போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லாக்கவுண்டர் தெரிவித்தார்.

ஒரே மாங்கொட்டையில் வளர்ந்த 5 செடிகள்

திருச்செங்கோடு

திருச்செங்கோடு அருகே விதைத்த ஒரு மல்கோவா மாங்கொட்டையில் இருந்து 5 செடிகள் வளர்ந்துள்ளன.
திருச்செங்கோடு அருகேயுள்ள ராமாபுரம் பூசாரிக்காட்டைச் சேர்ந்தவர் பெரியசாமி (45). இவர் நெடுஞ்சாலைத் துறைப் பணியாளர். சில நாள்களுக்கு முன்பு இவர் மல்கோவா மாம்பழக் கொட்டைகள் மூன்றை நிலத்தில் விதைத்தார்.
இதில் இரு கொட்டைகளில் தலா ஒரு செடி வீதம் வளர்ந்தது. மூன்றாவது கொட்டையில் 5 செடிகள் வளர்ந்துள்ளன. இந்தச் செடிகளை அந்தப் பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

ராஜா வாய்க்காலில் தண்ணீர் திறப்பது குறித்து அதிகாரிகள் ஆய்வு

பரமத்தி வேலூர்

ராஜா வாய்க்காலில் தண்ணீர் திறப்பது குறித்து திருச்செங்கோடு கோட்டாட்சியர் தலைமையில் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்து விவசாயிகளிடம் கருத்துகளைக் கேட்டனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் வெற்றிலை, வாழை, கரும்பு உள்ளிட்ட பணப் பயிர்களை அதிகளவு விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்தப் பயிர்களுக்கு ராஜா வாய்க்காலில் பிரியும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் ராஜா வாய்க்காலில் பராமரிப்பு பணிக்காக 15 நாள்கள் முதல் 20 நாள்கள் வரை தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம். ஆனால், விவசாயிகளின் கருத்துக்களைக் கேட்காமல் கடந்த 50 நாள்களுக்கு மேலாக தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.
இந்த நிலையில், பரமத்தி வேலூரில் தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கம் சார்பில், விவசாயிகளும், பொதுமக்களும் கடந்த 16-ஆம் தேதி பொதுப் பணித் துறை இளம் பொறியாளர் தர்மலிங்கத்தை முற்றுகையிட்டு, பயிரைக் காப்பாற்ற உடனடியாக ராஜா வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும். இல்லையென்றால் சாலை மறியலில் செய்யப்போவதாக தெரிவித்தனர்.
இதேபோல, பொய்யேரி வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் 17-ஆம் தேதி அவசரக் கூட்டம் நடத்தப்பட்டு, உடனடியாகத் தண்ணீர் திறக்காவிட்டால், சாலை மறியலில் செய்யப் போவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்ற, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி, ராஜா வாய்க்காலைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தார்.
இதன்படி, திருச்செங்கோடு கோட்டாட்சியர் செங்கோட்டையன் தலைமையில், பொதுப் பணித் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஜேடர்பாளையம் படுகை அணையில், ராஜா வாய்க்காலில் நடைபெற்று வரும் பணிகளைப் பார்வையிட்டனர். தொடர்ந்து, அங்கிருந்த விவசாயிகளிடம் கருத்துகளையும், குறைகளையும் கேட்டறிந்தனர்.
தொடர்ந்து, அய்யம்பாளையம் ராஜா வாய்க்காலில் வெள்ளப் பெருக்கு காலங்களில் தண்ணீர் வழிந்தோடி காவிரியில் கலக்கும் வகையில் அமைக்கப்படும் கரைப் பணியைப் பார்வையிட்டனர்.
பாண்டமங்கலம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வெற்றிலைக் கொடிக்களைப் பார்வையிட்டனர். மேலும், அங்கிருந்த விவசாயிகளிடமும் குறைகளைக் கேட்டறிந்தனர்.
இதுகுறித்து கோட்டாட்சியர் செங்கோட்டையன் கூறியது:
மாவட்ட ஆட்சியரின் உத்திரவுபடி, பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் ஜேடர்பாளையம், அய்யம்பாளையத்தில் ராஜா வாக்காலில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு செய்துள்ளோம். விவசாயிகளிடமும் கருத்துகள் கேட்டுள்ளோம்.

மாவட்ட ஆட்சியரிடம் இந்த ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பின்னர் இதுகுறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தண்ணீர் திறப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை உற்பத்தி பயிற்சி

ஓமலூர்

சேலம் மாவட்ட காடையாம்பட்டி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை உற்பத்தி பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தேசிய வேளாண், ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) திட்டத்தின் கீழ் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய அலுவலர்கள் பங்கேற்ற விதை உற்பத்தி குறித்த விவசாயிகள் பயிற்சி முகாம் காடையாம்பட்டி அருகேயுள்ள சந்தைபுதூர் கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையத் தலைவர், திட்ட ஒருங்கிணைப்பாளர் கே.மகேந்திரகுமார் தலைமை வகித்தார். நிலக்கடலை விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து உதவிப் பேராசிரியர்கள் ஆர்.ஜெகதம்மாள், எ.சுதா ஆகியோர் எடுத்துரைத்தனர்.

இந்தப் பயிற்சியில் காடையாம்பட்டி வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அ.நாசர் கலந்து கொண்டு திட்டங்கள் குறித்து பேசினார். பயிற்சி முகாமிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ப.தண்டபாணி செய்திருந்தார்.

கூடமலையில் பெண் மாயம்

தம்மம்பட்டி, ஜூன் 20: சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே இளம்பெண் மாயமானது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கெங்கவல்லி அருகேயுள்ள கூடமலையைச் சேர்ந்தவர் சங்கர். இவரது மனைவி சத்யா (28). இவர்களுக்கு ஒரு மகன், மகள் உள்ளனர். இந்த நிலையில் கடந்த 18-ஆம் தேதி முதல் சத்யாவை காணவில்லையாம். இதுகுறித்து சங்கர் அளித்த புகாரின் பேரில் கெங்கவல்லி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

ஜூன் 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் ஜூன் 27-ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறுகிறது.

ஆட்சியரக் கூட்ட மன்றத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம், மேலாண்மை, இடுபொருள்கள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளாண் தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ, மனுக்கள்

மூலமாகத் தெரிவித்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் ஜெயசிறிமுரளிதரன் தெரிவித்துள்ளார்.

"விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக மட்டுமே பேச வேண்டும்'

அரியலூர்,

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக மட்டுமே பேச வேண்டும் என்றார் அரியலூர் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் மணியன் பேசும்போது, அரியலூர் பேருந்து நிலையத்தில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. ஆனால் அரசின் சார்பில் "அம்மா' குடிநீர் என பாட்டிலில் அடைத்து 10 ரூபாய் விலைக்கு விற்கிறார்கள் என்றார்.

இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அதிமுக பிரமுகர் நீதி நெப்போலியன் பேசினார்.

உடனே குறுக்கிட்ட கம்யூனிஸ்ட் கட்சி விவசாய சங்க பிரமுகர் உலகநாதன் மணியன் பேசுவது தவறில்லை என்றார்.

இதனால் உலகநாதனுக்கும், நீதி நெப்போலியனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்னர், அதிகாரிகள் அவர்களை சமாதானம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து பேசிய மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ், இங்கு அரசின் கொள்கை முடிவுகளை விமர்சித்துப் பேச யாருக்கும் உரிமையில்லை. விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக மட்டுமே பேச வேண்டும். வேறு பொருள்கள் பற்றி பேசக் கூடாது.

இதேபோல் கூட்டத்தை நடத்த விடாமல் செய்தால் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மணியனிடம் எச்சரித்தார். இதைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

ஏரி, குளங்களை தூர்வார விவசாயிகள் வலியுறுத்தல்

அரியலூர்,

மழைக்காலம் தொடங்குவதற்குள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளை போர்க்கால அடிப்படையில் தூர் வார வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட வேளாண்மைத் துறையின் சார்பில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அரியலூர் ஆட்சியர் அலுவலகக் கூட்ட மன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசியது:
ஜெயச்சந்திரன் (விளந்தை உழவர் மன்றத் தலைவர்): அரியலூர் மாவட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும். விவசாயிகளுக்கு கணினியில் சிட்டா வழங்குவதில் சிக்கல் நீடிக்கிறது.
கங்கைகொண்டசோழபுரம் கோயிலை கட்டிய ராஜேந்திர சோழனின் 1000 -வது பிறந்த தினத்தை சிறப்பாகக் கொண்டாட ஆட்சியர் ஏற்பாடு செய்ய வேண்டும்.
உலகநாதன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர்): தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்டத் தலைநகர்களில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், அரியலூர் அரசு மருத்துவமனை மட்டும் தரம் உயர்த்தப்படவில்லை.
அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வேளாண்மைத் துறையிலிருந்து அனுப்பப்பட்ட 1 லட்சம் அகத்தி மரக்கன்றுகள் வழங்கப்படாமலேயே கருகி, காய்ந்து விட்டது.
அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களை தூர்வாரும் நடவடிக்கையை உடனே மேற்கொள்ள வேண்டும்.
பூ. விசுவநாதன் (தமிழ்நாடு ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர்): குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளுக்காக அரசு அறிவித்துள்ள திட்டங்கள் குறித்து விளக்கமாக தெரிவிக்க வேண்டும்.
அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா. பழூர் விவசாயிகளுக்கு மின்சாரத்தில் முன்னுரிமை வழங்கி மும்முனை மின்சாரம் பகலில் 10 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் தடையின்றி வழங்க வேண்டும்.
அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 10 ஏரிகளை தூர்வார அரசிடமிருந்து நிதி பெற வேண்டும்.
செங்கமுத்து (அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர்): ஏரி மற்றும் வரத்து வாய்க்கால்களில் உள்ள ஷட்டர்களை சரி செய்ய வேண்டும்.
பிச்சைபிள்ளை (அகில இந்திய விவசாயிகள் சங்கம்): அரியலூர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏரிகள் உள்ளன. அதனை தூர்வார வேண்டும். குருவாடி போன்ற இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். மாட்டு வண்டி மூலம் மணல் அள்ள அனுமதிக்க வேண்டும். அரியலூர் அரசு மருத்துவமனையில் "அம்மா' உணவகம் அமைக்க வேண்டும்.
பின்னர் மாவட்ட ஆட்சியர் பேசும்போது, தமிழக அரசு 2014 -ம் ஆண்டில் குறுவை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை பெருக்க குறுவை தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்த அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி அ ரியலூர் மாவட்டத்தில்

திருமானூர் வட்டாரத்தில் 26 கிராமங்களிலும், தா. பழூர் வட்டாரத்தில் 12 கிராமங்களிலும் மற்றும் ஜயங்கொண்டம் வட்டாரத்தில் 3 கிராமங்களிலும் என 3 வட்டாரங்களில் 41 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டம் 2500 ஏக்கரில் ரூ. 1.02 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. திருந்திய நெல், சமுதாய நாற்றங்கால் அமைக்கும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25,000 வீதம் 20 ஏக்கருக்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிங் சல்பேட் ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் 2500 ஏக்கருக்கு ரூ. 8.75 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.
நெல் நுண் சத்து ஏக்கர் ஒன்றுக்கு 5 கிலோ வீதம் 2500 ஏக்கருக்கு ரூ. 3.65 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், களர் மற்றும் களிமண் பாங்கான நிலத்தில் ஜிப்சம் இட ரூ. 17.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இதேபோல, உயிர் உரங்கள், நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி என ஒவ்வொன்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறுவை தொகுப்புத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் பட்டியல் அந்தந்தப் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை பெருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.
இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முஸ்தபா கமால்பாட்சா, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் சடையப்ப விநாயக மூர்த்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) ஜெயச்சந்திரன், இணை இயக்குநர் (வேளாண்மை) குணசேகரன், துணை இயக்குநர்(தோட்டக் கலைத் துறை) சுப்பையா மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு டெல்டா சலுகைகள் கிடைக்குமா?

ஆலங்குடி

தமிழக அரசு டெல்டா விவசாயிகளுக்கு கோடைகால நெல் சாகுபடி செய்ய அறிவித்துள்ள திட்டங்களை புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசன விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த 2 ஆண்டுகளில் போதியளவு பருவமழை பெய்யவில்லை. இதனால் மேட்டூர் அணையில் குறைந்தளவே தண்ணீர் இருப்பதால் கோடைகால நெல் சாகுபடிக்காக

வழக்கமாக திறக்கப்படும் தண்ணீரும் இந்த ஆண்டு திறக்கப்படாது என தமிழக அரசு அறிவித்துள்ளது.
இந்நிலையில் காவிரி பாசனம் பெறும் மாவட்டங்களில் கோடைகால நெல் சாகுபடி பாதிக்காமல் இருக்க முதல்வர் ஜெயலலிதா 7 அம்ச திட்டங்களை அறிவித்துள்ளார்.
இதில் ஒரு நாளைக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம், தண்ணீரை வீணாகாமல் எடுத்துச்செல்ல பிளாஸ்டிக் குழாய்கள், 200 விவசாயிகளுக்கு நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, நுண்ணூட்டம், துத்தநாக சல்பேட், உயிர் உரம், ஜிப்சம் உள்ளிட்டவைகளை 100 சதவிகிதம் மானியத்தில் டெல்டா விவசாயிகளுக்கு வழங்கப்படும் என இம்மாத தொடக்கத்தில் தமிழக முதல்வர் அறிவித்தார்.
இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி, ரெகுநாதபுரம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகள் காவிரி பாசனத்தை மட்டுமே நம்பி சாகுபடி செய்து வருகின்றனர்.
ஆனால் அவர்களுக்கு டெல்டா விவசாயிகளுக்கு கிடைக்கும் எந்தவித சலுகைகளும் கிடைப்பதில்லை.
இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த. செங்கோடன் கூறியது:
புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி, ரெகுநாதபுரம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி பகுதி விவசாயிகள் காவிரி பாசனத்தை மட்டும் நம்பியே சாகுபடி மேற்கொள்கின்றனர். ஆனால் டெல்டாவுக்கு அறிவிக்கப்படும் சலுகைகள் கறம்பக்குடி, ரெகுநாதபுரம் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பிற விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை.
இதனால் தமிழக அரசு விவசாயிகளின் நிலைமையை உணர்ந்து டெல்டா மாவட்டங்களோடு புதுக்கோட்டை மாவட்டத்தையும் இணைத்து டெல்டா விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளையும், மும்முனை மின்சாரத்தையும் வழங்கி புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## நுண்ணீர் பாசனத் திட்டத்துக்கு 100% மானியம்: ஆட்சியர்

தஞ்சாவூர்,
சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.
ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் தொடர்பாக

முன்னோடி விவசாயிகள் மற்றும் துறை அலுவலர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:
வேளாண் சாகுபடியில் பாசன நீர் மிக முக்கியமான இடுபொருளாகும். நிலத்தடி நீர் மூலம் வேளாண் சாகுபடிக்கு பாசன நீரை அதிகம் பயன்படுத்தி வருகிறோம். பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்த நுண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இத்திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நுண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
நுண்ணீர் பாசன திட்டம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 1,112 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இதுவரை 1,185 ஹெக்டேர் நுண்ணீர் பாசன வசதி பெற்றுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ. 4.36 கோடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசனத்தில் செடிகளுக்கு வழங்கப்படும் நீர், உரங்கள் பயிர்களுக்கு அருகே கிடைப்பதால், அதிக மகசூல் கிடைக்கிறது. சாகுபடி செலவு குறைந்து அதிக வருவாய் கிடைக்கிறது. எனவே தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டத்தை அமைத்து விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்றார் ஆட்சியர்.

## தேங்காய் கொப்பரைநேரடி கொள்முதல் நிலையம் தொடங்க வலியுறுத்தல்

வேதாரண்யம்

நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் தேங்காய் கொப்பரை நேரடி அரசு கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
வண்டுவாஞ்சேரி கிராமத்தில் தென்னை உற்பத்தி விவசாயிகள் சங்க கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.
கூட்டத்தில், வேதாரண்யம் பகுதியில் மூடப்பட்டுள்ள தேங்காய் கொப்பரை நேரடி அரசு கொள்முதல் நிலையத்தை மீண்டும் தொடங்கவும், நிலத்தடி நீரை பயன்படுத்தி பாசனம் செய்ய ஏதுவாக மானியத்தில் குழாய்களை அளிப்பதோடு, பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கேழ்வரகு,நிலக்கடலையில் மதிப்புக் கூட்டுதல் பயிற்சி

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், கேழ்வரகு மற்றும் நிலக்கடலையில் மதிப்புக் கூட்டுதல் பயிற்சி நடைபெற உள்ளது என்றார் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் கேழ்வரகு மூலம் மதிப்புக் கூட்டிய பொருள்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி ஜூன் 24-ம் தேதியும், நிலக்கடலையிலிருந்து மதிப்புக் கூட்டிய பொருள்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி ஜூன் 25-ம் தேதியும் நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் கேழ்வரகு மற்றும் நிலக்கடலையில் உள்ள சத்துக்கள் பற்றியும், அன்றாட உணவில் அவற்றை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது குறித்த மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்பப் பயிற்சி விளக்க உரையாகவும், செயல்முறை பயிற்சியாகவும் அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் பங்குபெற ஆர்வமுள்ளவர்கள் நேரடியாக அல்லது 04328- 293251, 293592 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு பெயரை பதிவுசெய்து கொள்ளலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களே பயிற்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே, ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயரை உடனடியாக பதிவு செய்து பயன்பெறலாம்.

## நெற்பயிரில் அதிக மகசூல்: விவசாயிக்கு காசோலை

நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் நெற்பயிரில் அதிக மகசூல் பெற்ற விவசாயியை பாராட்டி ரூ. 15 ஆயிரத்துக்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2014-2015ஆம் ஆண்டில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின்கீழ் மக்காச்சோளம் செயல் விளக்கம் செய்த 4 பயனாளிகளுக்கு ரூ. 3,750 மதிப்பீட்டில் 15 கிலோ மக்காச்சோளத்தை ஆட்சியர் வழங்கினார்.

இதேபோல் மாவட்ட அளவில் பயிர் விளைச்சலில் அதிக மகசூல் செய்த ஈத்தன்காடு பயனாளி ஆ. பிரகாசுக்கு ரூ. 15,000-க்கான காசோலையும் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 20.80 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 43.45 அடியும், சிற்றார்-

1இல் 8.03 அடியும், சிற்றார்-2இல் 8.13 அடியும், பொய்கை அணையில் 5.60 அடியும் நீர் இருப்பு உள்ளது. பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 490 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து விநாடிக்கு 253 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.
கடந்த ஏப்ரல் 1ஆம் தேதி முதல் ஜூன் 18ஆம் தேதி முடிய 2,558 ஹெக்டேர் பரப்பில் நெற்பயிரும், 16 ஹெக்டர் பரப்பில் உளுந்தும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.
விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 266 மெட்ரிக் டன்னும்,உற்பத்தியாளர்களிடம் 1,428 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 1,800 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 735 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 4,229 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என்றார்.
கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.
இதில், மாவட்ட வருவாய் அலுவலர் அ. உதயகுமார், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) போஸ்லின் வின்ஸ்டன் சாம், செயற்பொறியாளர் சுப்பிரமணியம், உதவி இயக்குநர் நசீர்பாபு, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் கலைச்செல்வன், விவசாய சங்க பிரதிநிதிகள் தங்கப்பன், முருகேசபிள்ளை, மருங்கூர் செல்லப்பன், புலவர் செல்லப்பா, வின்சான்ட்ரோ, திரவியம், டி. தேவதாஸ், சதாசிவம், பழனியாபிள்ளை, பத்மதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நிலுவைத் தொகை வழங்கிய பிறகு அரவையை தொடங்க வலியுறுத்தல்

கடலூர்,
நெல்லிக்குப்பம் தனியார் சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்கிய பிறகே சிறப்பு அரவையை தொடங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
நெல்லிக்குப்பம் ஈஐடி பாரி சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் விவசாயிகள் சங்கம் மற்றும் நெல்லிக்குப்பம் கரும்பு விவசாயிகள் நிவாரணக்குழு நிர்வாகிகள் கடலூர் மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமாரிடம் வெள்ளிக்கிழமை அளித்த மனு விவரம்:
மத்திய அரசு ஆண்டு தோறும் கரும்புக்கான ஆதார விலையை அறிவிப்பது வழக்கம். அந்தந்த மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப கூடுதல் விலையை அறிவிக்கும். இந்த விலை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் நடைமுறைக்கு வரும்.

நிகழாண்டு மத்திய அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2100 அறிவித்தது. தமிழக அரசு ரூ.2,650 அறிவித்தது. வாகன வாடகை ரூ.100 போக விவசாயிக்கு ரூ.2,550 கிடைக்கும். இது கடந்த ஆண்டை விட ரூ.300 கூடுதலாகும். தமிழக அரசு அறிவித்த விலையை கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வழங்குகிறது.

ஆனால், தனியார் ஆலைகள் சரிவர வழங்குவதில்லை. கடந்த ஆண்டு டன் ஒன்றுக்கு 2,250 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. அதுவே இந்தாண்டும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு அறிவித்த விலையை தனியார் ஆலைகள் வழங்காததைக் கண்டித்து விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தியும் பலனில்லை.

வழக்கமான அரவைப்பருவம் முடிந்து விட்ட நிலையில், டன்னுக்கு ரூ.300 நிலுவைத் தொகை வழங்கவில்லை. இந்த நிலையில் சிறப்பு அரவையை தொடங்க ஆலை நிர்வாகம் தயாராகி வருகிறது. இதனால் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு, அரசு அறிவித்தபடி, விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை ஆலை நிர்வாகம் வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சர்க்கரை ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி விதான செளதா முற்றுகை

பெங்களூரு,

கர்நாடகத்தில் கரும்புக்கு ஆதரவு விலை வழங்காத சர்க்கரை ஆலைகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, விதான செளதாவை விவசாயிகள் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டனர்.

கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் குருபூர் சாந்தகுமார் தலைமையில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஊர்வலமாகச் சென்று பெங்களூரு விதான செளதாவை முற்றுகையிட்டு, கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் விவசாயிகள் சங்கத் தலைவர் சாந்தகுமார் கூறியது: அண்மையில் கரும்புக்கு ஆதரவு விலையாக டன்னுக்கு ரூ. 2,650 நிர்ணயம் செய்து உத்தரவிட்டது. ஆனால், கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் ரூ. 2,000 மட்டுமே வழங்குகின்றனர்.

இன்னும் நிலுவைத் தொகையை வழங்காமல் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் காலம் கடத்துவதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். இதில் அரசு தலையிட்டு விவசாயிகளின் பிரச்னையை தீர்க்க வேண்டும்.

பெரும்பாலான கரும்பு ஆலை உரிமையாளர்கள் அமைச்சர்களாகவும், எம்.எல்.ஏகளாகவும் உள்ளனர். இதனால், அவர்களைக் கட்டுப்படுத்த அரசு தயக்கம் காட்டி வருகிறது. உடனடியாக இதில் அரசு தலையிட்டு கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆதரவு விலையை வழங்காத சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கரும்பு விவசாயிகள் பெற்றுள்ள கடன் தொகைக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார் அவர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

கோழிகளைத் தாக்கும் முக்கிய நோய்களில் ராணிக்கெட் நோயும் ஒன்று. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்தை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கண்டறிந்துள்ளது.

இந்த மருந்து குருணைகள் வடிவில் உள்ளது. 25 கோழிகளுக்குத் தேவையான மருந்து ஒரு புட்டியில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பு மருந்து அடங்கியுள்ள குருணைகளை ஒரு தட்டில் பரப்பி வைத்தால், உணவு உண்பதைப் போன்றே கோழிகள் அவற்றை கொத்தி உண்ணும்.

கோழியைப் பிடித்துக் கொண்டு அதன் வாயிலும் குருணை மருந்தை போடலாம். ஒரு கோழிக்கு இரண்டு குருணைகள் வழங்கிட வேண்டும். அதற்கு மேல் எடுத்துக் கொண்டாலும் கோழிகளுக்கு பாதிப்பு ஏற்படாது. காலையில் இந்த மருந்தை கொடுப்பதாக இருந்தால், அதற்கு முந்தைய நாள் இரவில் கோழிகளுக்கு தீவனம் அளிக்காமல் இருப்பது நல்லது.

மேலும் விவரங்களுக்கு சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியல் துறையை அணுகலாம். தொடர்புக்கு: 044 **2530 4000**

## இந்திய விஞ்ஞானி ராஜாராமுக்கு உலக உணவு விருது: கோதுமை உற்பத்தியை 20 கோடி டன் அதிகரித்தவர்

இந்திய தாவரவியல் விஞ்ஞானி சஞ்சய ராஜாராமுக்கு 2014-ம் ஆண்டுக்கான உலக உணவு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. உலக கோதுமை உற்பத்தியை பசுமைப் புரட்சி மூலம் 20 கோடி டன் உயர்த்தியமைக்காக இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்கான பரிசுத் தொகை 2.5 லட்சம் அமெரிக்க டாலர்களாகும் (சுமார் ரூ.1.5 கோடி). ராஜாராம், குளிர்காலம் மற்றும் கோடைகாலத்துக்கு ஏற்ற ஒட்டுவகை கோதுமை ரகங்களைக் கண்டுபிடித்தார். இவ்வகைக் கோதுமை அதிக அளவு மகசூல் கொடுக்கக்கூடியவை.

மொத்தம் 480-க்கும் மேற்பட்ட அதிக மகசூல் தரும் கோதுமை ரகங்களை ராஜாராம் கண்டறிந்தார். இந்த கோதுமை ரகங்கள் 51 நாடுகளில் சிறு மற்றும் பெரு விவசாயிகளால் பெரிதும் விரும்பி பயிர் செய்யப்படுகின்றன.

விருது குறித்த அறிவிப்பை வெளியிட்டு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி கூறுகையில், “ராஜா ராமின் சேவை, நாம் இன்னும் பணி செய்ய வேண்டும் என அனைவரையும் தூண்டுவதாக இருக்கிறது. அடுத்த 30 ஆண்டு களுக்கு 200 கோடிக்கும் அதிக மான மக்களுக்கான தேவை யைப் பூர்த்தி செய்வது சிரமம். இது இரண்டாவது பசுமைப் புரட்சிக்கான நேரமாகும். ராஜாராம் கண்டறிந்த நூற்றுக் கணக்கான கோதுமை ரகங்களுக்காக நாம் நன்றி சொல்லக் கடமைப்

பட்டிருக்கிறோம். அவர் கண்டுபிடித்த கோதுமை ரகங்கள் ஆண்டுக்கு 20 கோடி டன் உற்பத்தியை அதிகரித்து, உலகம் முழுவதும் லட்சக் கணக்கானவர்களின் உணவுத் தேவையை நிறைவு செய்துள்ளது” என்றார்.

பசுமைப் புரட்சியின் தந்தை என கூறப்படும் நார்மன் இ போர்லாக், சர்வதேச மக்காச்சோளம் மற்றும் கோதுமை மேம்பாட்டு மையத்தின் (சிஐஎம்எம்ஒய்டி) கோதுமைத் திட்டத்தை 1976-ம் ஆண்டு முதல் 2001-ம் ஆண்டு வரை வழிநடத்தி வந்தார். அவருக்குப் பிறகு அத்திட்டத்தின் இயக்குநர் பொறுப்பை ராஜாராம் ஏற்றார். உத்தரப்பிரதேச மாநிலத்தில் பிறந்த ராஜாராம், ஆஸ்திரேலியா வின் சிட்னி பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். தற்போது மெக்ஸிகோவில் வசித்து வருகிறார்.

**கணிதத் தாக்கம்: கணிதமறிந்த தேனீக்கள்**

அற்புதமான உயிரினங்களில் ஒன்றாகத் தேனீக்கள் கருதப்படுகின்றன. அநேக வனங்களில் காணப்படும் இந்தச் சிறிய வகைப் பூச்சிகள் தேனை உட்கொண்டு வாழ்கின்றன. தேனீக்கள் மலர்களில் அடங்கியிருக்கும் தேனை எடுத்து அதன் கூட்டில் சேமித்துக்கொள்கின்றன.

தேன் கூட்டை நாம் உற்றுப் பார்த்தால் அது அறுகோண வடிவிலாளான கண்ணறைகளால் அமைக்கப்பட்டுக் காட்சியளிப்பதை அறியலாம். ஏன் அறுகோணச் செதில்களைத் தேனீக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்? இதற்கான விடையை அறிய முயல்வோம்.

அறுகோண வடிவம் கணித அடிப்படையில் முக்கியமானது. கொடுத்த இடத்தில் இடைவெளி இல்லாமலும் ஒன்றின் மேல் மற்றொன்று குவியாமலும் இருக்க வேண்டுமானால் அதற்குச் சில வடிவங்கள் உள்ளன. முக்கோணம், சதுரம் மற்றும் அறுகோண வடிவங்களே அவை. மற்ற வடிவங்களில் ஒன்று இடைவெளி தோன்றும் அல்லது ஒன்றின் மீது மற்றொன்று குவிந்து காணப்படும்.

தேன் அதிக அடர்த்தியும், பாகு நிலையும், ஒட்டும் தன்மையும் கொண்ட பொருளாக விளங்குகிறது. ஆகையால் அதைத் தேக்கி வைக்கத் தகுந்த கொள்ளளவைக் கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதிக அடர்த்தியும், பாகு நிலையும் கொண்ட தேனை எந்த வடிவுடைய பொருளைக் கொண்டு பாதுகாக்க முடியும்?

மேற்கூறிய மூன்று வடிவங்களில் அறுகோண வடிவமே அதிகக் கொள்ளளவு கொண்டது. கொடுத்த மேற்பரப்பில் அதிகக் கொள்ளளவைக் கொண்டிருக்கும் உருவமாகக் கோளம் அமையும் என்பது கணித உண்மை. எனவே கொடுத்த பொருளை (தேனை) அதிகக் கொள்ளளவில் அடைக்க அறுகோணக் கண்ணறைகளாலான கோளம் போன்ற வடிவ உருவம் கொண்ட தேன்கூடு மிகவும் உதவிகரமானது. இதில் அறுகோண அமைப்பு தேனைக் கீழே சிந்தாமல் பாதுகாக்கவும், கோளம் போன்ற அமைப்பு அதிக அளவில் தேனைச் சுமக்கவும் உதவுகின்றன. இவ்வமைப்பை உடைய உண்மையான தேன்கூட்டை மேற்கண்ட படத்தில் காணலாம். இரு அரிய கணிதப் பண்புகளைக் கொண்ட அறுகோண வடிவைத்தான் தங்களது வாழ்வாதாரமான தேனைப் பாதுகாக்கத் தேனீக்கள் பயன்படுத்துகின்றன.

தேனீக்கள் இந்த வடிவை எப்படி முடிவுசெய்தன? அனுபவத்தின் அடிப்படையில் இருக்கலாம். வெவ்வேறு முயற்சிகளில் ஆகச் சிறந்த முயற்சியை அனுபவத்தில் கண்டுகொண்டு அதையே தமக்கான வடிவமாக முடிவுசெய்திருக்கலாம்.
அல்லது தேனீக்கள் கணிதம்கூட அறிந்திருக்கலாம். யார் கண்டது!

**சத்தும் சுவையும் பொதிந்த சிறிய விதை: நமது ஊட்ட உணவு**

அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில் புதையல் இருக்கும் இடத்தின் கதவைத் திறக்க அலிபாபா சொல்லும் வசனம் 'திறந்திடு சீசேம்' (Open Sesame). சீசேம் என்பது எள்ளுக்கான ஆங்கிலப் பெயர்.
உண்மையிலேயே எள்ளில் பொதிந்திருக்கும் ஊட்டச்சத்துகள் கணக்கற்றவை. அதை ஒரு பொக்கிஷ விதை என்றே சொல்லலாம்.
எள்ளில் மூன்று வகை உண்டு. கறுப்பு எள், எண்ணெய்ச்சத்து நிறைந்தது. சிவப்பு எள், இரும்புச் சத்து மிகுந்தது. தங்க அல்லது தந்த நிறம் கொண்ட எள், சமையலுக்கு உகந்தது.
அளவில் சிறிதாக இருந்தாலும், இந்த விதைகள் ஊட்டச்சத்து நிரம்பியவை. இதில் புரதச்சத்து, வைட்டமின் ஏ, பி, சி, அத்துடன் தாமிரம், இரும்பு, துத்தநாகம், மாலிப்டினம், செலினியம், பாஸ்பரஸ் போன்ற கனிமச் சத்துகளும் நிரம்பியுள்ளன. ரத்த நாளங்கள், எலும்பு மூட்டு இணைப்புகள், எலும்பு போன்றவற்றை வலுப்படுத்தவும், அவை இழுவைத்தன்மையுடன் இருக்கவும் தாமிரம் உதவும். எலும்பு மூட்டு இணைப்புகள், எலும்புகளுக்குத் துத்தநாகமும் நல்லது. "எள்ளில் மெதியோனைன் (methionine), டிரைடோபன் (tryptophan) என்ற இரண்டு அமினோ அமிலங்கள் உள்ளன. மற்றச் சைவப் புரத உணவு வகைகள் எதிலும் இந்த இரண்டும் இல்லை" என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் உணவு நிபுணரான ரெபேக்கா உட்ஸ்.
எள்ளில் எண்ணெய்ச் சத்து அதிகம். அதிக விளைச்சலையும் தரக்கூடியது.
அரசர்களுக்கு மசாஜ் செய்வதற்கான எண்ணெயாக நல்லெண்ணெய் பயன்பட்டிருக்கிறது. அது மன அழுத்தத்தைக் குறைத்து, நரம்பு மண்டலத்தையும் மேம்படுத்துகிறது.
ஆரோக்கிய ரீதியில் பார்த்தால், கல்லீரலுக்கும், சிறுநீரகத்துக்கும் எள் நல்லது. பொதுவான உடல் பலவீனத்தைக் குறைத்து, உடலை மேம்படுத்தும். சில ஆராய்ச்சிகளின்படி, குறிப்பிட்ட சில நீரிழிவு நோய்களுக்கான சிகிச்சையை எள் மேம்படுத்துகிறது. இது குறைந்த கிளைசிமிக் உணவும்கூட.
சுவை ரீதியில் பார்த்தால் வறுக்கப்பட்ட எள்ளை சாலட், சாஸ் போன்றவற்றில் தூவினால் அவற்றின் இனிப்புச் சுவை கூடும். இந்திய உணவு வகைகளில் மிகவும் பிரபலமான உருளைக்கிழங்கு கறியிலும் இட்லியிலும் இதைப் பயன்படுத்தலாம். கொங்கணி மக்கள், எள்ளை வைத்துச் சுவையான சட்னியைச் செய்வது ரொம்ப பிரபலம்.

ஒரேயொரு பிரச்சினை, அதிக அளவு எண்ணெய்ச் சத்து இருப்பதால், எள்ளைச் சரியாக மூடி வைக்கவில்லை என்றால் சீக்கிரம் கெட்டுப் போய்விடும். அதனால் காற்று புகாத கலனில் இதை அடைத்து வைக்க வேண்டும். குளிர்ச்சியான, ஒளி புகாத இடத்தில் சேமித்து வைத்தால், மூன்று மாதங்கள் வரை நன்றாக இருக்கும். சுமார் 6 மாதங்களுக்கு இதைச் சேமிக்க வேண்டுமென நினைத்தால், குளிர்பதனப் பெட்டியில் வைத்துவிடுங்கள்.